இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 29-03-2024

# வேலைவாய்ப்பு - கைவிரிப்பு

“வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையை மத்திய அரசு தீர்க்க முடியாது” - என்று பிரதமரின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் சொல்லி இருக்கிறார். அதாவது வேலையில்லாத் திண்டாட்டத்தை பா.ஜ.க. அரசு தீர்க்கவில்லை என்பதே அவர் சொல்ல வருவது ஆகும்.

**‘வேலைவாய்ப்பின்மையை மத்திய அரசால் தீர்க்க முடியாது’ என்றால், ஆளத் தகுதியற்றவர்களால் பத்தாண்டுகளாக இந்தியா ஆளப்பட்டுள்ளது என்று பொருள்!**

பிரதமர் ஆவதற்கு முன்னால் மோடி சொன்னது என்ன? ‘ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவோம்’ என்பது ஆகும். பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையிலும் இது இடம் பெற்றது. போகுமிடமெல்லாம் இதனைத்தான் மோடியும் சொன்னார். மோடிக்கு ஆதரவாக இளைஞர்கள் திரண்டதும் இதனால்தான். குஜராத் மாநிலத்தை அவர் ஏதோ தேனாறும் பாலாறும் ஓடும் மாநிலமாக ஆக்கிவிட்டதைப் போலவும், அதேபோல் இந்தியாவை ஆக்கப்போவதாகவும் இளைஞர்களை நம்ப வைத்தார்கள். அதைத்தான் பட்டவர்த்தனமாக போட்டு உடைத்திருக்கிறார் பிரதமரின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் .

வேலைவாய்ப்பின்மையை மத்திய அரசால் தீர்க்க முடியாது என்று இப்போது ஆலோசகர் சொல்கிறார். ஆனால், ‘வேலைவாய்ப்பின்மையே இந்தியாவில் இல்லை, அனைவருக்கும் வேலை கிடைத்துவிட்டது’ என்று பிரதமர் இதுவரை சொல்லி வந்தாரே! அதற்கு என்ன பொருள்?

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ.) மற்றும் மனித மேம்பாட்டு நிறுவனம் (ஐ.ஹெச்.டி.) ஆகியவை இணைந்து ஒரு அறிக்கையை வெளியிட்டு உள்ளன. ‘இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை - 2024’ என்று இதற்குப் பெயர். அதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

★ **2012ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது இன்று வேலைவாய்ப்பின்மை 3 மடங்காக உயர்ந்துள்ளது.**

★ **2000 ஆம் ஆண்டில் கல்வித் தகுதிபெற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை 35.2 விழுக்காடாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் 65.7 விழுக்காடாக உள்ளது.**

★ **இந்தியாவில் வேலைவாய்ப்பு கிடைக்காமல் பாதிக்கப் பட்டவர்களில் இளைஞர்கள் 83 விழுக்காடு**

★ **கிராமப்புற இளைஞர்களில் 17.5 விழுக்காடு இளைஞர்கள் மட்டுமே நிரந்தர வேலையைப் பெற்றுள்ளார்கள்.**

★ **தொழில் நிறுவனங்கள் மற்றும் உற்பத்தித் துறையில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டிலிருந்து 26 விழுக்காடாகவே இருக்கிறது.**

★ **நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் பணியாற்றும் இளைஞர்களின் விழுக்காடு 2012 இல் 42 ஆக இருந்து, இப்போது 37 ஆக குறைந்துவிட்டது. - இப்படி பல்வேறு தரவுகள் அந்த அறிக்கையில் உள்ளன.**

‘இந்த அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது’ என்று மேடைதோறும் முழங்குகிறார் பிரதமர் மோடி. ஆனால் உண்மை இதுதான். ‘ரோஜ்கர் மேளா’ என்பதை கடந்த ஆண்டு நடத்தினார் பிரதமர். வரும் ஒன்றரை ஆண்டில் 10 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கப்போவதாகச் சொன்னார். செய்து தரப்பட்டதா பத்து லட்சம் வேலை வாய்ப்புகள்?

‘இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம்’ வெளியிட்ட அறிக்கைப்படி 2023ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பின்மை விழுக்காடு அதிகம் ஆகி உள்ளது. 2020 ஆம் ஆண்டு மட்டும் வேலையின்மை காரணமாக இந்தியாவில் 3 ஆயிரத்து 548 பேர் தற்கொலை செய்து கொண்டதாக ஒன்றிய அரசு வெளியிட்ட ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது.

**“சிறு குறு நிறுவனங்களைப் புறக்கணித்ததால்தான் வேலைவாய்ப்பில் சரிவு ஏற்பட்டது” என்று அமைச்சர் பழனிவேல் தியாகராசன் கருத்துத் தெரிவித்துள்ளார். “ஒன்றிய அரசு முதலாளித்துவ நோக்கில் முதலீடுகளை ஈட்டி, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களைப் புறந்தள்ளுவது, வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கு ஒருபோதும் துணை நிற்காது. வேலை வாய்ப்பில் ஏற்பட்டுள்ள இப்பின்னடைவுக்கு மனித வளர்ச்சியில் ஒன்றிய அரசு கவனம் செலுத்தாததுதான் முக்கியக் காரணம் ஆகும்” என்று தெளிவாக விளக்கி உள்ளார்.**

பா.ஜ.க. அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் தான் இவற்றுக்கெல்லாம் முழுமுதல் காரணம். பெருந்தொழில்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவதும், பெரும் முதலீடுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவதும் இதற்குக் காரணம். பெரும் தொழில் நிறுவனங்களை உருவாக்கும் போது அதில் வேலைவாய்ப்புகளும் உருவாகும் தன்மையை வலியுறுத்துவது இல்லை பா.ஜ.க. அரசு. பெருந்தொழில் நிறுவனங்களை விட சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களே அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும். ஆனால் அதனை ஊக்குவிப்பது இல்லை.

இன்று வரை மர்மமாக இருக்கும் 500,1000 ரூபாய் நோட்டுத் தடையும் - மிகப்பெரிய அளவில் கொடூரமாக அமல்படுத்தப்படும் ஜி.எஸ்.டி. வரி விதிப்பு முறையும் சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்களையும் அமைப்புசாராத் தொழில்களையும் பாதிக்கு மேல் அழித்துவிட்டதும் வேலைவாய்ப்பின்மைக்கு மிக முக்கியக் காரணம் ஆகும். கொரோனாவால் முடக்கப்பட்ட தொழில்களும், அதனால் பறிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளும் அதிகம். அவை இரண்டில் இருந்தும் மீட்பதற்கான எந்தத் திட்டத்தையும் மோடி அரசு கொண்டு வரவில்லை. அது பற்றிச் சிந்திக்கவுமில்லை.

நமக்குக் கிடைக்கும் புள்ளிவிபரங்கள் அனைத்தும் வேலை தேடுபவர்களின் புள்ளிவிபரங்கள்தான். படித்து முடித்துவிட்டு வேலை தேடாதவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இன்னும் அதிகம் ஆகும். இவை எதைப் பற்றியும் அக்கறை இல்லை பா.ஜ.க. அரசுக்கு என்பதைத்தான் பொருளாதார ஆலோசகரின் கூற்று மெய்ப்பிக்கிறது.

**இன்னொன்றையும் பிரதமரின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் சொல்லி இருக்கிறார். “சமூகப் பொருளாதாரப் பிரச்சினை களுக்கும் மத்திய அரசால் தீர்வு காண முடியாது” என்கிறார். அப்படியானால் ஆட்சி, அதிகாரம் எதற்கு? கொடியேற்றவும், வெளிநாடு செல்லவும்தானா? அதிகாரத்தை அனுபவிப்பதற்கு மட்டும்தானா? சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துவிட்டதாகச் சொன்னதும் நாடகம் தானே?**

**இந்திய இளைஞர்களின் கனவைச் சிதைத்த இவர்களுக்கு வாக்களிக்கலாமா?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.03.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பரப்புரை செய்யும் விதமாக தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் முயற்சியில் 12 பேர் எழுதிய கட்டுரைகள் தொகுப்பான “வீழட்டும் பாசிசம்! வெல்லட்டும் ஜனநாயகம்” ஒன்றியத்தில் மலரட்டும் திராவிட மாடல் ஆட்சி என்ற புத்தகத்தை வெளியிட்டார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான எம்.ஹெச். ஜவாஹிருல்லா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு செயலாளர் சுபேர் கான், ஊடகவியலாளர் செந்தில் வேலன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.03.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் உரிமைக்கான கூட்டமைப்பின் (Society for the Rights of Backward Communities) ஒருங்கிணைப்பாளர் ரெத்தின சபாபதி, கனகராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தல் 2024-லில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், உயர்கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பட்டியலின மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடுகள் முறையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய தேசிய மற்றும் மாநிலங்களின் அளவில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவருக்குமான ஆணையம் (Commission for Diversity, Equity and Inclusion) அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தனர்.

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து

# 50க்கும் மேற்பட்ட அமைப்பினர் ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவு!

## வெற்றிக்குப் பாடுபடுவோம் என உறுதி!

**சென்னை, மார்ச் 29 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து 50க்கும் மேற்பட்ட அமைப்பினர் சங்கங்கள் ஆதரவு தெரிவித்து இந்தியா கூட்டணி வெற்றிபெறப் பாடுபடுவோம் என வாக்குறுதி அளித்தனர்!**

தமிழ்நாடு உட்பட இந்தியாவின் கட்டுப்பாடான ஜனநாயக மதச் சார்பற்ற கூட்டாட்சித் தத்துவம் பாதுகாக்கப் படவும், பாசிச பா.ஜ.க. ஆட்சியை ஒன்றியத்தில் இருந்து அகற்றிடவும் 10 ஆண்டு காலம் ஊழல்கள் மூலம் தமிழ் நாட்டைப் படுபாதாளத்திற்குத் தள்ளிய அ.தி.மு.க கட்சியைப் புறக்கணித்திடவும் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையில் தமிழ்நாட்டில் அமைந்துள்ள ‘இந்தியா’ கூட்டணி தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் தொடங்கி அனைத்து மாவட்டங்களிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் வெள்ளம் போல் திரண்டு வந்து வரவேற்பு தெரிவித்து இந்தியா கூட்டணிக்கே தங்களுடைய வாக்குகள் என்று கூறி ஆதரவு தெரிவித்த காட்சிகளும் செய்திகளும் தொலைக் காட்சிகள் பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பல்வேறு கட்சிகளும் அரசியல் இயக்கங்களும் அமைப்புகளும், சங்கங்களும் சந்தித்து தங்கள் ஆதரவை தெரிவித்து வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :-

திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் ஆகியோர் தம்முடைய கட்சிகள் சார்பில் ஆதரவு தெரிவித்து பிரச்சாரம் மேற்கொண்டுள்ளனர்.

**இந்தியா கூட்டணிக்கு எம்.ஜி.ஆர்.கழகம் ஆதரவு**

அருளாளர் இராம. வீரப்பன் தலைமையிலான எம்.ஜி.ஆர்.கழகம், புதிய திராவிடர் கழகம் சார்பில் அதன் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினருமான ராஜ் கவுண்டர் மற்றும் நிர்வாகிகள்;

ஈரோடு மாவட்டத்தில் செயல்படும் சமூக நீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவைத் தலைவர் வடிவேல் ராமன் மற்றும் நிர்வாகிகள்,

தென்னக அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் செங்குட்டுவன் மற்றும் நிர்வாகிகள், கோவில் பூசாரி நல சங்கத் தலைவர் வாசு மற்றும் மாநில நிர்வாகிகள், தமிழக விவசாயிகள் வாழ்வாதார முன்னேற்ற சங்கத் தலைவர் பரிமளம் மற்றும் நிர்வாகிகள்,

தென்னிந்திய விஸ்வகர்மா முன்னேற்ற சங்கத்தின் நிறுவனத் தலைவர் சரவணன்; தமிழக வீரசேவை முன்னேற்ற பேரவை, தலைவர் தங்க தமிழ் செல்வன்; தமிழ்நாடு தியாகராஜ பாகவதர் எம்கேடி பேரவை மாநிலத் தலைவர் கவிஞர் ரவி பாரதி, எஸ்.ஆர்.எம். மாநில பொதுச் செயலாளர் பாலசுப்பிரமணியன் சமூக நீதிக் கட்சி சார்பில், மாநில பொதுச்செயலாளர் வெள்ளமடை நாகராசன் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர். மேலும், பூலித்தேவன் மக்கள் கழகத்தின் தலைவர் எஸ்.பெருமாள்சாமி ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

**தி.மு.க. கூட்டணிக்கு புதிதாக 16 விவசாய சங்கங்கள் ஆதரவு!**

காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் கே.வீ.இளங்கீரன் தலைமையில் இந்திய விவசாயிகள் சங்கம் தனபதி, ஐக்கிய விவசாயிகள் சங்கம் சங்கரய்யா, சிபா கரும்பு விவசாயிகள் சங்கம் வாரணாசி ராஜேந்திரன், தற்சார்பு விவசாயிகள் சங்கம் பொன்னையா, உழவர் மன்ற கூட்டமைப்பு ஜீவகுமார், மதுரை மாவட்ட நஞ்சை புஞ்சை விவசாயிகள் சங்கம் மணிகண்டன், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு நல சங்கம் சுப்பிரமணியம் உட்பட மொத்தம் 16 அமைப்புகளின் பிரதிநிதிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 23.3.2024 அன்று சந்தித்து தி.மு.க. கூட்டணிக்குத் தங்களின் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

மேலும், சமூக நீதிப் பேரவை, தமிழக நலிவுற்ற விவசாயிகள் சங்கம், தஞ்சாவூர் மாநகர காய்கனி விற்பனையார்கள் சங்கம், ஜனநாயக சமூக நல கூட்டமைப்பு, நம்மாழ்வார் இயற்கை விவசாயம் ஆகிய இயக்கங்களும் தூத்துக்குடியில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை 26.3.2024 அன்று காலை, தூத்துக்குடியில், கிறிஸ்துவ, இஸ்லாமிய மற்றும் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து, இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தினர் மற்றும் தொழிலதிபர்கள் 12 பேர் சந்தித்து அரசு செய்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்து ஆதரவு தெரிவித்தனர், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தென்னிந்திய உலோக கொள்கலன் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம், பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த செந்தில் மற்றும் விவேகா னந்தம், தனியா உற்பத்தியாளர் வணிக சங்கத்தைச் V.S.R.ராதா கிருஷ்ணன் மற்றும் சௌந்தரபாண்டியன் சேர்ந்த விருதுநகர், வர்த்தக சபையைச் சேர்ந்த பவளம் சத்யமூர்த்தி, மிளகாய் வர்த்தக சபையைச் சேர்ந்த ஆனந்த்

தென்காசி மாவட்டத்தில் வைகுண்டராஜா வணிக சங்கத்தைச் சேர்ந்த செங்குந்த முதலியார் சங்கத்தைச் சேர்ந்த சங்கர சுப்பிரமணியன், ஜவுளி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சுப்பிரமணியன், யாதவர் சங்கத் தலைவர் குருசாமியின் மனைவி திருமதி வேலம்மாள், புளியங்குடி பள்ளிவாசல் ஜமாத் கமிட்டித் தலைவர் மௌலூல் கவுமி உட்பட 50க்கு மேற்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து ‘இந்தியா’ கூட்டணி வெற்றிக்கு ஆதரவு தெரிவித்தனர்.



தேர்தல் பிரச்சாரத்தின் போது காந்திகிராமம் ஊராட்சி சாமியார்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி மூலம் நலத்திட்ட உதவிகளைப் பெற்ற மாற்றுத்திறனாளி பெண் விஜயலட்சுமி, அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு நன்றி தெரிவித்ததோடு சி.பி.எம். வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்திற்குத்தான் அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்களிப்பேன் என்று கூறி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.